1995 மே 3]

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் பின்னத்தூர் கிராமத்திற்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

529—

வயலூர் ஊராட்சியில் குழந்தைகள் நல மையத்திற்கு கட்டிடம் கட்டுதல்

**25093—திரு. எஸ். ஆசைமணி:*

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், வயலூர் ஊராட்சியில் பழுதடைந்துள்ள குழந்தைகள் நல மையத்திற்கு புதிய கட்டிடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து செயற்குறிப்புகள் வரப்பெற்றால் அரசு ஆவன செய்யும்.

530—

மணலூர்ப் பேட்டையில் விசைத்தறிக் கூடம் அமைத்தல்

**37135—திருமதி ஆர். சாவித்திரி அம்மாள்:*

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—